3. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஒரு பிரச்சினை குறித்துக் கொடுத்திருக்கிறீர்கள்; அது நாளை எடுத்துக் கொள்ளப்படுமென்று உங்களுக்கு நான் சொல்லியிருக்கிறேன். அதனால், அது வேண்டாம். (குறுக்கீடு) அது நாளை எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கிறேன் அல்லவா? (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளை எடுத்துக் கொள்ளப்படும் என்று சொன்னதற்கு நன்றி, ஆனால், இது வேறொரு பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேறொரு பிரச்சினையை நீங்கள் என்னிடம் சொல்லவில்லை. (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதான எதிர்க்கட்சி வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அன்றைக்கே சொன்னேன், என்னிடம் எந்தத் தகவலும் சொல்லாமல் இங்கே வந்து பேசக்கூடாது என்று. எனவே, உட்காருங்கள்.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய தீர்ப்புக்குள் நான் போகவில்லை.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள், என்னிடம் சொல்லிவிட்டுத்தான் நீங்கள் பேசவேண்டும். நீங்கள் அதைப்பற்றிப் பிரச்சினை கிளப்ப வேண்டுமென்று என்னிடம் சொல்லியிருந்தால், நான் அதற்கு அனுமதி கொடுத்திருப்பேன். நீங்கள் எதுவுமே சொல்லாமல், இந்த நேரத்திலே அவ்வாறு எழுப்பக் கூடாது. நாளைக்கு உங்கள் பிரச்சினை எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தாமரைக்கனி, நீங்களும் எதுவும் சொலலாமல், இங்கே வந்து சத்தம் போடக்கூடாது. (குறுக்கீடுகள்)

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் என்னிடம் அதைச் சொல்லிவிட்டுப் பேசினால், அதற்கு நானும் பதில் சொல்லலாம்; பேரவை முன்னவரும் பதில் சொல்லலாம். நீங்கள் என்னிடத்தில் எதுவும் சொல்லாமலே வந்து பேசக்கூடாது. இன்னொரு பிரச்சினையைப் பற்றிப் பேச வேண்டுமென்று சொன்னீர்கள்; அது, நாளை எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) இளம்வழுதி நீங்கள் என்னை வந்து பார்த்தீர்கள், அது நாளை எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லி, அதை அனுமதித்திருக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு)

4. கவன ஈர்ப்பு

(அ) அம்பாசமுத்திரம் தொகுதி, இராமா நதி அணை வெள்ளத்தினால் மணல் மேடிட்டிருப்பதை அப்புறப்படுத்த வேண்டிய அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஆர். முருகையா பாண்டியன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஆர் முருகையா பாண்டியன். (குறுக்கீடு).

திரு ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அம்பாசமுத்திரம் தொகுதி, இராமா நதி அணையில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால், மணல் மேடிட்டிருப்பதை அப்புறப்படுத்துவது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை" மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடு)

3. தகவல் கோரல்-தொடர்ச்சி

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து--தொடர்ச்சி.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமுகமான ஒரு முடிவு வருவதற்கு, நீங்கள் ஒரு யோசனை செய்ய வேண்டுமென்றுதான்............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் என்னிடம் அதுகுறித்துச் சொல்லிவிட்டு இங்கே வந்து பேசவேண்டும். என்னிடம் அறையிலே வந்து இதைப்பற்றிப் பேச வேண்டுமென்று கேட்டு, என்னுடைய அனுமதியை அங்கே பெற்றுவிட்டு, இங்கே வந்து பேசவேண்டும். (குறுக்கீடு) இங்கே வந்து அவ்வாறு பேசுவது முறையல்ல. அதிலேதான் விவகாரமே வந்தது. (குறுக்கீடு) இல்லை; நீங்கள் பேசுவது மாதிரி, அன்றைக்குப் பேசியதால்தான் விவகாரமே வந்தது. உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களை உட்காருங்கள் என்று நான் சொல்கிறேன் அல்லவா? உட்காருங்கள் (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல எண்ணத்தின் அடிப்படையிலேதான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நல்ல எண்ணத்தின் அடிப்படையிலேதான் நானும் சொல்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்; அதை என்னுடைய அறையில் வந்து பேசுங்கள். அவை முடிந்தவுடன் என்னுடைய அறைக்கு வாருங்கள். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர். (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறுபரிசீலனை செய்து, அவர்களும் இந்த விவாதத்தில் வந்து பங்கேற்க வேண்டுமென்றுதான் தங்களை......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நீங்கள் உட்காருங்கள்.

4. கவன ஈர்ப்பு--தொடர்ச்சி

(அ) அம்பாசமுத்திரம் தொகுதி இராம நதி அணை வெள்ளத்தினால் மணல் மேடிட்டிருப்பதை அப்புறப்படுத்த வேண்டிய அவசியம் குறித்து--தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

1994 ஏப்ரல் 4]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது :

அறிக்கை

சமீபத்தில் ஏற்பட்ட புயல் வெள்ளத்தால் மட்டுமின்றி சென்ற நவம்பர் 1992ல் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தால் இராமா நதி அணை மட்டுமின்றி இம்மாவட்டதில் உள்ள பெரும்பாலான அணைகளிலும் மண் மேடிட்டுள்ளது. இவ்வாறு படிந்துள்ள மண்ணின் அளவு, மற்றும் நீர்த்தேக்கங்களின் தற்போதைய கொள்ளளவுகளை அறியும் பொருட்டு தேவையான ஆய்வை அரசின் அனுமதி பெற்று மேற்கொள்ள பூண்டி நீரியல் மற்றும் நீர் நிலையியல் இயக்குநர், தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களால் கோரப்பட்டுள்ளார். ஆய்வுப் பணிகள் முடிந்ததும் தேவையிருப்பின் தேவையான நிதி ஒதுக்கீடு பெற்று மேற்படி அவைகளில் படிந்துள்ள மண்ணை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். முருகையா பாண்டியன் (குறுக்கீடு)

3. தகவல் கோரல்--தொடர்ச்சி

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து--தொடர்ச்சி

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான மானியக் கோரிக்கைகளை எல்லாம் எடுத்துக்கொள்ள இருக்கிறோம்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடு) மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் திரும்பத் திரும்பச் சொல்லியும், அவர் உட்காராமலேயே அதே பிரச்சினையைக் கிளப்பி, அன்று ஏற்பட்ட அதே சூழ்நிலையை ஏற்படுத்த அவர் விரும்புகிறாரா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். தாங்கள் ஏற்கனவே சொல்லி விட்டீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அதை அவருக்குச் சொல்லி விட்டேன்; அதை என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள்; அதற்குப்

பிறகு நான் உங்களுக்கு அனுமதி கொடுக்கிறேன்; அப்போது வந்து இங்கே பேசுங்கள் என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்றுதான் நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நல்ல சூழ்நிலையை இப்போது நீங்கள் கெடுக்க நினைக்கிறீர்கள். நல்ல சூழ்நிலையில்தான் இப்போது அவை நடந்து கொண்டிருக்கிறது, நீங்கள் உட்காரவும். திரு. ஆர். முருகையா பாண்டியன். (குறுக்கீடு) நான் இவ்வளவு சொல்லிய பிறகும், நீங்கள் உட்காரவில்லை என்றால், அது முறையல்ல. உட்காருங்கள்.

திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இளம்வழுதி, உட்காருங்கள். (குறுக்கீடு).

திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு) **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். முருகையா பாண்டியன், நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள். அது சரியல்ல; அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. உங்களைக் கேள்வி கேட்கத்தான் நான் அனுமதித்திருக்கிறேன். அது முறையல்ல. (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான்தான் அது முறையல்ல என்று சொல்லிவிட்டேனே? அது முறையல்ல என்று சொன்னதும், அவர் உட்கார்ந்து விட்டார். நீங்கள் செய்வது முறையல்ல என்று சொன்னவுடன், நீ'ங்களும் உட்கார்ந்துவிடுங்கள். (குறுக்கீடு) அந்த மாதிரியெல்லாம் பேசக்கூடாது. உட்காருங்கள்.

4 கவன ஈர்ப்பு--தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. முருகையா பாண்டியன்.

(அ) அம்பாசமுத்திரம் தொகுதி இராமா நதி அணை வெள்ளத்தினால் மணல் மேடிட்டிருப்பதை அப்புறப்படுத்த வேண்டிய அவசியம் குறித்து--தொடர்ச்சி.

** **மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.**